சுற்றறிக்கை இல. 01/2000.

எனது இல: என்ஈபி/சிஓ/பொது-02
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
திருகோணமலை,
14.03.2000.

சகல ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கும்,
ஏனைய பாரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கும்.

## பணியாளர் சம்பள மீளாய்வு - 1999.

கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பளத் திட்டங்களை 01.01.2000மாம் ஆண்டிலிருந்து அதிகரித்து வழங்குவதற்கான 31/99 இலக்கமிட்ட சுற்றறிக்கையொன்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் (வகி) வெளியிடப்பட்டுள்ளது. இப் புதிய சம்பளத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சில சங்கங்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் மனநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்தி அதனூடாக அவர்களின் வினைத்திறனை அதிகரிக்கச்செய்யும் நோக்கத்துடன் மேற்படி சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் அச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளங்களை வழங்குவதற்கு முன்னர் பின்வருவனவற்றை கவனத்திற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

01. இதுவரை ஆளணி அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாத கூட்டுறவுச் சங்கங்கள் அதற்கான விண்ணப்பத்தினை எனக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

02. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் இன்னுவரை கொழும்பு ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட பழைய ஆளணி பட்டியல்களையே நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவ்வாறான சங்கங்கள் அவற்றை மீளாய்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. ஆளணியைப் பெற்றுக்கொண்ட சங்கங்கள் அப்பதவிகளுக்கு தகுதியான பணியாளர்களை தீர்மானம் எடுத்து முறைப்படி அமர்த்துதல் வேண்டும். இதற்கான அனுமதியை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து பெறுதல் மிக அவசியமானது.

04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் அனுமதிபெற்று பதவிநிர்ணயம் செய்யப் பட்ட பணியாளர்களுக்கே குறிப்பிட்ட அதிகரித்த சம்பளம் வழங்கப்படலாம் என்பதால் இவ்விடயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

(02)..

05. முறைப்படி பணியாளர்களை பதவியில் அமர்த்தாத சங்கங்கள் உள்வாரியாக விண்ணப்பங்களைக் கோரி நேர்முகப்பரீட்சை ஒன்றினை மேற்கொண்டு தகுதியடிப்படையில் பதவிகளை நிர்ணயித்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

06. இப்புதிய சம்பளத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு சங்கத்தின் நிதிநிலைமை பற்றிய கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுதல் அவசியம். நட்டத்தில் இயங்கும் சங்கங்கள் இவ்வதிகரித்த சம்பளத்தை வழங்க முடியாதிருக்கும்.

07. நிதிநிலைமை பாதகமாயிருக்கும் பட்சத்தில் மேலதிக பணியாளர்களை குறைப்பதற்கு அல்லது தேவையற்ற பதவிகளை நீக்குவதற்கு அல்லது சங்கங்களின் வியாபாரத்தினைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

08. மீளாய்வு செய்து அமுல்படுத்தவுள்ள புதிய சம்பளத்திட்டத்தை சகல விபரங்களுடனும் உங்கள் பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அவரின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

09. சரியான வழிமுறைகளை பின்பற்றாது வழங்கப்படும் சம்பளம் கணக்காய்வின்போது கேள்விக்குட்படுத்தப்படலாம். ஆகையால் இவ்விடயத்தில் போதிய கவனம் எடுத்தல் விரும்பத்தக்கது.

க. சிவசிதம்பரம்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வகி).

பிரதி:- 01. சகல கூட்டுறவு உதவி ஆணையாளர்களுக்கும் - அறிக்கை சமர்ப்பிப்பதற்காக.

02. செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வ.கி.மா.,
திருகோணமலை.
- தகவலுக்காக.